# 14-05-2024 செய்தி

## தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால் நாட்டின் இறக்குமதி 38% உயர்வு

- 2019 முதல் 2024ம் நிதியாண்டு வரையிலான காலகட்டத்தில், தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்ட நட்பு நாடுகளிடம் இருந்து இந்தியாவின் இறக்குமதி, 38 சதவீதம் அதிகரித்துள்ளதாக, ஜி.டி.ஆர்.ஐ., தெரிவித்துள்ளது.
- ஐக்கிய அரபு எமிரேட்ஸ், தென்கொரியா மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுடன் செய்து கொண்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் வாயிலாக, இந்தியாவின் இறக்குமதி 2019-ம் நிதியாண்டு முதல் 2024ம் நிதியாண்டு வரையிலான காலகட்டத்தில் 38 சதவீதம் அதிகரித்து, கிட்டத்தட்ட 15.60 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.
- ஒட்டுமொத்த உலக வர்த்தகத்தில், இந்தியா 1.8 சதவீத பங்குடன், ஏற்றுமதியில் 17வது இடத்தில் உள்ளது.
- இறக்குமதியில் 2.8 சதவீத பங்களிப்புடன் 8வது இடத்தில் உள்ளது.

## 10 ஆண்டு குத்தகையில் சபாகர் துறைமுகம்

- ஈரானின் சபாகர் துறைமுகத்தை 10 ஆண்டுகள் குத்தகைக்கு இந்தியா பெற்றிருக்கிறது.
- இதுதொடர்பாக இரு நாடுகள் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.
- சீனாவின் ஒரே பாதை, ஒரே மண்டலம் திட்டத்தின் கீழ் பாகிஸ்தானின் குவாதர் நகரில் உள்ள துறைமுகத்தை சீன அரசு நிர்வகித்து வருகிறது.
- இதன்மூலம் வளைகுடா நாடுகள், மத்திய ஆசிய நாடுகள், ஐரோப்பிய நாடுகளுடனான கடல் வழி சரக்கு போக்குவரத்தை சீனா அதிகரித்து வருகிறது.
- சீனாவுக்கு போட்டியாக குவாதர் துறைமுகத்தில் இருந்து 72 கி.மீ. தொலைவில் உள்ள ஈரானின் சபாகர் துறைமுகத்தை இந்தியா குத்தகைக்கு பெற்றிருக்கிறது.
- 2018-ம் ஆண்டு டிசம்பர் 24-ம் தேதி முதல் பாகரின் சாகித் முகமது பெஹஷ்டி துறைமுகத்தை குத்தகை அடிப்படையில் இந்தியா நிர்வகித்து வருகிறது. இந்த குத்தகை ஓராண்டுக்கு ஒருமுறை நீட்டிக்கப்பட்டு வந்தது.
- தற்போது நீண்ட கால அடிப்படையில் ஈரானின் சபாகரில் உள்ள சாகித் முகமது பெஹஷ்டி துறைமுகத்தை 10 ஆண்டுகள் குத்தகைக்கு இந்தியா பெற்றிருக்கிறது.

## இந்தியாவுடனான வர்த்தகத்தில் முதல் இடத்தை பிடித்த சீனா

- இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டு நாடாக 9.84 லட்சம் கோடி ரூபாயுடன் சீனா முதலிடத்திலும், 9.81 லட்சம் கோடி ரூபாயுடன் அமெரிக்கா இரண்டாவது இடத்திலும் உள்ளதாக, ஜி.டி.ஆர்.ஐ., தெரிவித்துள்ளது.
- 2022 மற்றும் 2023ம் நிதியாண்டுகளில், இந்தியாவின் மிகப் பெரிய வர்த்தக கூட்டாளராக அமெரிக்கா இருந்தது.

| நாடு | வர்த்தகம் (ரூ.லட்சம் கோடி) | நாடு | வர்த்தகம் (ரூ.லட்சம் கோடி) |
|---|---|---|---|
| சீனா | 9.83 | அமெரிக்கா | 9.82 |
| யு.ஏ.இ., | 6.94 | ரஷ்யா | 5.45 |
| சவுதி | 3.60 | சிங்கப்பூர் | 2.95 |

## புதிய ரூபாய் நோட்டு வரைபடத்தில் இந்தியப் பகுதிகள்: விமர்சித்த நேபாள அதிபரின் பொருளாதார ஆலோசகர் ராஜிநாமா

- நேபாளத்தின் புதிய 100 ரூபாய் நோட்டுகளில் இந்தியாவின் லிம்பியா தூரா, லிபுலேக், காலாபாணி பகுதிகள் அடங்கிய புதிய வரைபடத்தை சேர்க்க முடிவு மேற்கொள்ளப்பட்ட நிலையில், அதை விமர்சித்த நேபாள அதிபர ராம்சந்திர பௌடேலின் பொருளாதார ஆலோசகர் சிரஞ்சீவி நேபாள் ராஜிநாமா செய்துள்ளார்.
- இந்திய - நேபாள-சீன முச்சந்திப்பில் லிம்பியா துரா, லிபுலேக் மற்றும் காலாபாணி பகுதிகள் உள்ளன. இந்தியாவுக்குச் சொந்தமான இந்தப் பகுதிகளுக்கு நேபாளமும் உரிமை கோரி வருகிறது.
- இந்தச் சூழலில், நேபாளத்தின் புதிய 100 ரூபாய் நோட்டுகளில் அந்நாட்டின் புதிய வரைபடத்தில் லிம்பியாதுரா, லிபுலேக், காலாபாணி ஆகியவற்றை சேர்க்க கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.
- இந்த முடிவுக்கு அதிருப்தி தெரிவித்த இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், இது லிம்பியா துரா, லிபுலேக், காலாபாணி பகுதிகள் தொடர்பான சூழலில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்று தெரிவித்தார்.
- இந்நிலையில், 100 ரூபாய் நோட்டுகளில் புதிய வரைபடத்தை சேர்ப்பது தகாத நடவடிக்கை என்ற நேபாள அதிபர் ராம்சந்திர பௌடேலின் பொருளாதார ஆலோசகர் சிரஞ்சீவி நேபாள் கருத்து தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

## காஸா என்னும் வசிப்பிடம் இப்போது இல்லை

- பல ஆண்டுகளாக நீடித்துவரும் இஸ்ரேல்-பாலஸ்தீனப் பிரச்சினை இன்றைக்கு உச்சத்தை அடைந்திருக்கிறது.
- அக்டோபர் 7 ஆம் தேதி பாலஸ்தீன தீவிரவாத இயக்கமான ஹமாஸ், இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி 1,300க்கும் அதிகமான இஸ்ரேலியர்களைக் கொன்ற சம்பவம்தான், இன்றைய சிக்கலைத் தொடங்கிவைத்தது.
- காஸா மீதான தாக்குதலை இன்றுவரை தொடரும் இஸ்ரேல், இதுவரை 35,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்களைக் கொன்று குவித்திருக்கிறது.

**சுடுகாடாக மாறிய காஸா**

- பாலஸ்தீனத்தின் காஸா என்ற ஒரு வசிப்பிடம் இப்போது இல்லை. அது சுடுகாடாக மாற்றப்பட்டுவிட்டது.
- பின்விளைவுகளைத் தெரிந்தே தீவரவாதத் தாக்குதல் நடத்திய ஹமாஸ் தீவிரவாதிகள் ஒருபுறம்; அந்த அமைப்பை முழுவதும் ஒழிப்பதே தனது ஒரே குறிக்கோள் எனச் சொல்லும் இஸ்ரேல் மறுபுறம். இப்போது ஹமாஸ் பதுங்கியிருக்கும் காஸாவின் மற்றுமொரு முக்கியமான குடியிருப்பான ரஃபாவைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தத் தொடங்கிவிட்டது.
- கிட்டத்தட்ட 10 லட்சம் மக்கள் வசிக்கும் ரஃபாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல் பாலஸ்தீனியர்களுக்குப் பேரழிவாக முடியும்.

**இஸ்ரேல் இழைக்கும் போர்க் குற்றம்:**

- காஸாவின் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களும் பாலஸ்தீனர்களின் பெரும் உயிரிழப்பும் இஸ்ரேலின் போர்க் குற்றமாகக் கருதப்படும்.